DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 205/2022

List of Witness : Lw13

Prosecution Witness : PW6

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | L.வேலுச்சாமி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | லிங்கமநாயக்கர் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :– 11/06/2026

(2 முதல் 4 எதிரிகள் ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை. 1வது எதிரி தரப்பு வழக்கறிஞர் 1வது எதிரியின் அடையாளம் குறித்து எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் பேரில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது இடையகோட்டை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு இடையகோட்டை காவல் நிலையத்தில் பணிபுரிந்த சார்பு ஆய்வாளர்கள் சின்னச்சாமி ஆகியோர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சயம். வழக்கு கோப்பு மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 16.07.2021 ஆம் தேதி 14.30 மணிக்கு இடையகோட்டை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் சின்னச்சாமி அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது எம்.அத்தப்பன்பட்டி அஞ்சல், கணவாய்பட்டியை சேர்ந்த ஆரப்பகவுண்டர் மகன் ராமசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று நிலைய குற்ற எண் 195/2021 பிரிவு 379 இதசவாக வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகார்தாரரின் புகாரையும் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினமே 14.30 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று பட்டியல் சாட்சிகள் பழனிச்சாமி, நாச்சிமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதை சுற்றியுள்ள இடத்தையும் பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து மற்றும் பார்வை மகசர் தயார் செய்துள்ளார். **பார்வை மகசர் அ.சா.ஆ.7 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன.** பின்பு சாட்சிகள் ராமசாமி, காளியாத்தாள், சுப்பிரமணி, ரஞ்சித்குமார், கருப்பணகவுண்டர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து

வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். பின்பு 27.09.2021 ஆம் தேதி இடையகோட்டை காவல் நிலைய குற்ற எண் 195/2021 பிரிவு 379 இதச வழக்கின் எதிரியை தேடிவந்த நிலையில் திருப்பூர் மாவட்டம், மூலனூர் காவல் நிலைய குற்ற எண் 596/2021 பிரிவு 379 இதச வழக்கில் கைதான எதிரிகள் சடையாண்டி, மூலனூர் காவல் நிலையத்தில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி பல்லடம் கிளை சிறையில் இருந்த எதிரிகள் கருவாயன் என்ற சதீஸ்குமார், முத்துராமன், சடையாண்டி, செல்வக்குமார் ஆகியோர்களை இடையக்கோட்டை காவல் நிலைய குற்ற எண் 195/2021 பிரிவு 379 இதச வழக்கில் சார்பு ஆய்வாளர் லோகநாதன் சம்பிராதய கைது செய்துள்ளார். அதன்பின்னர் 29.10.2021 ஆம் தேதி அன்று எதிரிகள் கருவாய் என்ற சதீஸ்குமார், முத்துக்குமார், சடையாண்டி, செல்வக்குமார் ஆகியோர் திண்டுக்கல் மாண்பமை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்றுவிட்டபடியால் அவர்களை கைது செய்யப்படவில்லை. பின்பு 19.10.2021 ஆம் தேதி 09.00 மணிக்கு தண்டபாணி, முருகன் ஆகியோர் முன்னிலையில் 3வது எதிரி சடையாண்டி என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். 3**வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு அன்றைய தேதியில் 3வது எதிரி சடையாண்டி என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ரூ.10,000/− (500 x 20) ஆஜர் செய்து அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். **அத்தாட்சி அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **படிவம் 91 அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகின்றன.** பின்பு ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சிகளான தண்டபாணி, முருகன் மற்றும் சம்பிராதய கைது செய்த சார்பு ஆய்வாளர் லோகநாதன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். பின்பு இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து 17.12.2021 ஆம் தேதி 1 முதல் 4 எதிரிகள் மீது பிரிவு 379 இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சொன்ன விதத்தில் சொன்ன மாதிரி வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடம் செல்லாமலேயே காவல் நிலையத்தில் வைத்து வழக்கின் தோதுக்கு ஏற்ப பார்வை மகஜர் வரைபடம் ஆகிய ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் உண்மைக்கு மாறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது

என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.06.11 17:51:24 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 11/06/2026